**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 96 /2021 PW .1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலசுப்பிரமணியன் | தந்தை/கணவர் பெயர்: அய்யாக்கண்ணு | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.04.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>06.04.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது முறையூரில் குடியிருந்து எலட்ரிக்கல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரியைத் தெரியும். அவர் எனது கடையில் வேலை செய்யும் நவீன் குமாரின் மாமா ஆவார். கடந்த 06.07.2021ம் தேதி இரவு 07.00 மணியளவில் நான் நவீன் குமாரை இரு சக்கர வாகனத்தில் அவரது வீட்டிற்கு சென்று அவரை விட்டுவிட்டு திரும்பி சென்று கொண்டிருந்த போது சூரக்குடி அண்ணாநகர் அருகே எனக்கு பின்னால் மற்றொரு இரு சக்கர வாகனத்தில் ஒரு நபர் வந்தார்.

2. அந்த நபர் அவரது இரு சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டிச்சென்று எனது வாகனத்தை முந்தி செல்லும் போது உருட்டு கட்டையால் எனது முகத்தில் அடித்தார் . அதில் எனது உதட்டில் காயம் ஏற்பட்டது . எனது இரு சக்கர வாகனம் கீழே விழுந்து விட்டது. நானும் விழுந்து விட்டேன் . நான் விழுந்தவுடன் ஏற்கனவே உருட்டு கட்டையால் எனது முகத்தில் அடித்த மீனாட்சி சுந்தரம் மீண்டும் என்னை உருட்டு கட்டையால் எனது தலையில் அடித்தார் நான் தடுத்ததில் எனது இடது கையில் காயம் ஏற்பட்டது. மேலும் எதிரி என்னைப் பார்த்து தேவுடியா பயலே உன்னை அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என கெட்ட வார்த்தையால் திட்டினார்.

3.எனது சத்தம் கேட்டு அருகே இருந்த மாதவன் அங்கே வந்துவிட்டார் . உடனே எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார் . நான் நவீன்குமாருக்கு போன் செய்தேன் . நவீன்குமார் உடனே அங்கு வந்து என்னிடம் நடந்த விவரத்தை விசாரித்தார் . அதன்

பின்னர் என்னை எஸ் .வி மங்கலம் காவல் நிலையத்திற்கு இரு சக்கர வாகனத்தில் நவீன்குமார் அழைத்து சென்றார்.

4. அங்கே சென்றவுடன் போலீசார் என்னை மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். உடனே நவீன்குமார் என்னை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் . அங்கே நான் சிகிச்சையில் இருந்த போது போலீசார் அங்கு வந்து என்னை விசாரித்தார்கள் . நான் நடந்த விவரங்களை கூறினேன். அப்போது நவீன்குமாரும் அங்கு இருந்தார் . அவரையும் விசாரித்தார்கள் . நான் கையொப்பம் செய்தேன் . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் . அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் . ( **அந்த புகார் வாக்குமூலம் அ .த.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). எனக்கும், எதிரிக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை .அவர் ஏன் என்னை அடித்தார் என்று எனக்கு தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

5. எதிரி ஆஜரில்லை . எதிரி வழக்கறிஞர் ஆஜர் . குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.